**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 01.12.2025**
**OS. No. 191/2023**
**வழக்கு சாட்சி PW.1–கோவிந்தன் , த/பெ.மாதையன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் தற்போது குள்ளவீரன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கல் உடைக்கும் தொழிலை ஆட்கள் வைத்து செய்து வருகிறேன். நாங்கள் தற்போதுள்ள தாவா சொத்தானது வருவாய் துறையினருக்கு சொந்தமான நிலம் ஆகும், நான் கவுன்சிலர் பதவிக்காக தேர்தலில் போட்டியிட்டதை எதிர்த்து போட்டியிட்டவரின் தூண்டுதலின் பேரில் நகராட்சி என் சுவாதீனத்தில் பிரச்சனை செய்கிறது அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் வார்டு எண், பிளாக் எண் தெரியுமா என்றால் எனக்கு படிப்பு இல்லாததால் சரியாக தெரியவில்லை. நான் தற்போது குடியுள்ளது தார்சு வீடு என்றால் சரிதான்.

2) தாவா சொத்திற்கு பட்டா இன்னும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர வேறு ஏதேனும்சொத்து என் பெயரிலும், என் மனைவி பெயரிலும் உள்ளதா என்றால் என் மனைவி பெயரில் அவர்கள் வீட்டார் கொடுத்த பழைய ஓட்டு வீடு உள்ளது. தாவா சொத்தில் தார்சு வீடு கட்டி சுமார் 30 வருடங்கள் ஆகிறது. நான் சொல்வது தவறானது என்றும், நான் 30 வருடத்திற்கு முன்பு தார்சு வீடு கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், இந்த வழக்கு தாக்கல் செய்தபோது தான் கூரை வீட்டை இடித்து தார்சு வீடு கட்டினேன் என்றால் சரியல்ல.

3) தாவா சொத்திலுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு என் மனைவி கமலா பெயரில் உள்ளது. குடிநீர் இணைப்பு என் பெயரில் உள்ளது. எங்கள் வீட்டிற்கு வடபுறம் 15 அடி தார் ரோடு உள்ளது, கிழபுறமும் ரோடு தான் உள்ளது. நாங்கள் நகராட்சிக்கு சொந்தமான மேற்கண்ட ரோட்டில் 2.5 மீட்டர் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல,

நான் வீடு கட்டி 15 வருடங்கள் கழித்து தான் தார் ரோடு போடப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும், தார் ரோடு முதலில் இருந்தே உள்ளது என்றும், நான் தான் ஆள் பலம் மற்றும் அரசியல் பலத்தை வைத்து ஆக்கிரமித்து என் வீட்டை கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ரோட்டை ஆக்கிரமித்து கட்டியுள்ளதால் அங்குள்ள மக்களால் அந்த ரோட்டை பயன்படுத்தி வண்டி, வாகனங்கள் மூலம் செல்ல இடையூறாக உள்ளது என்றால் சரியல்ல. நகராட்சி நிர்வாகத்தால் திருப்பூர் மற்றும் மேட்டுரில் உள்ள நில வார்டுகளுக்கு ரோடு அமைக்க சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் 2023ல் என் வீட்டின் பக்கத்திலுள்ள ரோட்டை அளந்து பார்த்தபோது நான் ஆக்கிரமிப்பு செய்த விவரம் நகராட்சிக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல.

4) நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் அனைத்தும் ஆக்கிரமிப்பு செய்து நான் கட்டிய பகுதிக்கு என்பதால் எவ்வித சட்டப்படியான சுவாதீனதாரர் என்று என்னை எடுத்துக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. நான் கட்டியுள்ள வீடு பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது என்றும், என் வீட்டை இடித்தால் தான் பொதுமக்கள் அந்த சாலையை பயன்படுத்த இயலும் என்றால் சரியல்ல, நான் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை, அதனால் நான் தாக்கல் செய்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.